குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2, கரூர்.
முன்னிலை:- M.சார்லஸ் ஆல்பர்ட், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2 கரூர்

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம், ஆனி திங்கள் 15-ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29-ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.76/2024
CNR NO. TNKR02-001183-2024

1.	Name of the court	Judicial Magistrate No.2,Karur.		
2.	Name of the Judge	Thiru. M. Charles Albert, B.Com., B.L.,		
3.	Date of Judgment	25.06.2026		
4.	Case Number along with CNR Number	CC 76/2024 CNR.NO.TNKR02-001183-2024		
5.	Name of the Parties of the case	Inspector of Police Velayuthampalayam Police Station /Vs/ Saravanan S/o.Ramasamy		
6.	Date of Occurrence	17.10.2019		
7.	Date of Complaint	17.10.2019		
8.	Date of Arrest if any and Remand	17.10.2019		
9.	Period of remand of the accused	17.10.2019 - 04.11.2019		
10.	Date of Release on bail	04.11.2019		
11.	Date of Final report	12.02.2024		
12.	Date of Committal of the case to the Court of Session	NIL		
13.	Date of questioning of the accused U/s. 240 of Code of Criminal Procedure	07.01.2026		
14.	Date of examination in Chief and Cross examination of the witness	No. of. Witness	Chief	Cross
		PW1 PW2	17.06.2026 17.06.2026	17.06.2026 17.06.2026

<table>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code</td><td><table><tr><th>Party</th><th>Nature of Petition</th><th>CrlM.P/ M.P.No.</th><th>Result</th></tr><tr><td>Prosecution</td><td>Petition filed u/s.311 of Cr.P.C</td><td>3/26</td><td>Allowed on 17.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>16</td><td>Date of examination of the accused U/s. 313 of the Code</td><td>23.06.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td>Nil</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>04.02.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of closure of Trial</td><td>23.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence or order</td><td>29.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of service of copy of judgment to the accused</td><td>29.06.2026</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give explanation</td><td>No</td></tr>
</table>

புகார்தாரர்	அரசுக்காக, காவல் ஆய்வாளர், வேலாயுதம்பாளையம் காவல் நிலையம், கா. நி. கு. எண்.318/2019
எதிரியின் பெயர்	சரவணன், த/பெ.ராமசாமி, 12A, பழனிமுத்து நகர், P.புகளூர் தாலுக்கா, கரூர் மாவட்டம். தற்போது காந்தி நகர்,

	ஆத்தூர், கரூர் மாவட்டம்.
அரசு தரப்பில் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றம்	U/s. 379 IPC
நீதிமன்றத்தால் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றம்	U/s. 379 IPC
எதிரியின் பதில்	குற்றவாளி இல்லை
நீதிபதியின் முடிவு	குற்றவாளி
அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர்	செல்வி R. முருகேஸ்வரி, B.A., B.L. (Hons).,
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.R. கார்த்திக்பெருமாள், B.A., B.L.,
இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள்	23.06.2026
தீர்ப்பு வழங்கப்பட்ட நாள்	29.06.2026

இவ்வழக்கானது கடந்த 12.02.2024 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 23.06.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை– 2 செல்வி R. முருகேஸ்வரி, B.A., B.L.(Hons), கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.R. கார்த்திக்பெருமாள், B.A., B.L., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 25.06.2026–ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

கடந்த 17.10.2019 ந் தேதி காலை 08.00 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல் நிலைய சரகத்தில் மணல் திருட்டு தடுக்கும் பொருட்டு காவல் நிலைய ஆய்வாளர்கள் தவிட்டுபாளையம் தளவாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது காவல் ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் புகளூர் வாய்க்கால் பாலம் அருகில் சென்று வாகனத்தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த TN–45–C–0701 என்ற பதிவெண்கொண்ட TVS 50 இருசக்கர வாகனத்தில் எதிரி அரசுக்கு சொந்தமான கனிம வளத்தை எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் அரசுக்கு இழப்பை ஏற்படுத்தவும் மற்றும் வியாபாரம் செய்யும் ஆதாய நோக்கத்துடன் தனது சுயலாபம் கருதி திருட்டு தனமாக

புகளூர் காவிரி ஆற்றிலிருந்து மணலை திருடி மணல் மூட்டையுடன் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் வந்துள்ளதாகவும், எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு.379 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வேலாயுதம்பாளையம் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.318/2019 எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் C.C.No.76/2024 ஆக எடுக்கப்பட்டுள்ளது.

2) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச 207–ஆவது பிரிவின்படி வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரியிடம் அவர் மீதான இ.த.ச. பிரிவு 379–ன் படியான குற்றச்சாட்டு குறித்து வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி, பொய் வழக்கு என்று கூறினார். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ. 5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் எதிரி தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை.

<u>5)</u> **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>**

i) இவ்வழக்கில் **அ.சா.1 பிரகாஷ்** தன் சாட்சியத்தில் " நான் தற்போது வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக 17.10.2019 ம் தேதி காலையில் பணியிலிருந்தபோது நானும், என்னுடன் பணிபுரிந்த காவலர் மாரிமுத்து, சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்தவடிவேல் என்பவருடன் மணல் திருட்டு மற்றும் குற்ற நோக்கு வாகனத்தணிக்கை சம்மந்தமாக வேலாயுதம்பாளையம் காவல் நிலைய சரகம் கட்டிபாளையம், தவிட்டுபாளையம், தளவாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 8.00 மணிக்கு புகளூர் வாய்கால் பாலம் அருகில் சென்று கண்காணித்த போது அந்த வழியாக வந்த TN 45 C 0701 என்ற TVS 50 இருசக்கர வாகனத்தில் மணல் மூட்டையுடன் வந்தவர் எங்களை கண்டதும் அங்கிருந்து தப்பித்து செல்ல முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவரது பெயர்

சரவணன் என்றும், புகளூர் காவேரி ஆற்றிலிருந்து சிமெண்ட் சாக்கு பைகளில் மணலை அரசு அனுமதியின்றி திருடி விற்பனைக்கு கொண்டு செல்வதாக கூறினார். எதிரியை காலை 8.15 மணிக்கு கைது செய்தும் இருசக்கர வாகனம் மற்றும் மணலை கைப்பற்ற தனிநபர்கள் யாரும் முன் வராததால் உடன் வந்த நானும், காவலர் மாரிமுத்து முன்னிலையில் 8.30 மணிக்கு கைப்பற்று மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பின்னர் காலை 9.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனத்தை தான் சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றியதாகும். இவ்வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். " என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2 கருணாநிதி** தன் சாட்சியத்தில் " நான் தற்போது வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்த வடிவேல் ஆய்வாளர் பணிபுரிந்த ஜெயராமன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரீச்சையமானது. கடந்த 17.10.2019 ம் தேதி காலையில் பணியிலிருந்தபோது மு.நி.கா. பிரகாஷ், காவலர் மாரிமுத்து, சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்தவடிவேல் என்பவருடன் மணல் திருட்டு மற்றும் குற்ற நோக்கு வாகனத்தணிக்கை சம்மந்தமாக வேலாயுதம்பாளையம் காவல் நிலைய சரகம் கட்டிபாளையம், தவிட்டுபாளையம், தளவாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 8.00 மணிக்கு புகளூர் வாய்கால் பாலம் அருகில் சென்று கண்காணித்த போது அந்த வழியாக வந்த TN 45 C 0701 என்ற TVS 50 இருசக்கர வாகனத்தில் மணல் மூட்டையுடன் வந்தவர் போலீசாரை கண்டதும் அங்கிருந்து தப்பித்து செல்ல முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவரது பெயர் சரவணன் என்றும், புகளூர் காவேரி ஆற்றிலிருந்து சிமெண்ட் சாக்கு பைகளில் மணலை அரசு அனுமதியின்றி திருடி விற்பனைக்கு கொண்டு செல்வதாக கூறினார். எதிரியை காலை 8.15 மணிக்கு கைது செய்தும் இருசக்கர வாகனம் மற்றும் மணலை கைப்பற்ற தனிநபர்கள் யாரும் முன் வராததால் உடன் வந்த மு.நி.கா. பிரகாஷ், காவலர் மாரிமுத்து முன்னிலையில் 8.30 மணிக்கு கைப்பற்று மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் காலை 9.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து குற்ற எண். 318/2019, ச.பி.379 இ.த.ச r/w 21(1) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். தொடர்ந்து சாட்சிகளான பிரகாஷ் , காவலர் மாரிமுத்து ஆகியோர்களை தனித்தனியே

விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை நீதிமன்ற காவலுக்க அனுப்பி வைத்துள்ளார். பின்னர் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் ஜெயராமன் பார்வைக்கு வைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் சட்டப்பிரிவை 379 இதச உ/இ 21(1)MMDR Act லிருந்து 379 இதசவாக மாற்றம் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இத்துடன் ஆய்வாளர் விசாரணையை முடித்து வழக்கு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். " என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)–ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்று கூறியதால், எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது சாட்டப்பட்ட இ.த.ச. பிரிவு 379 ஆவது பிரிவின் படியான குற்றங்களை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

9) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

கடந்த 17.10.2019 ந் தேதி காலை 08.00 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல் நிலைய சரகத்தில் மணல் திருட்டு தடுக்கும் பொருட்டு காவல் நிலைய ஆய்வாளர்கள் தவிட்டுபாளையம் தளவாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது காவல் ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் புகளூர் வாய்க்கால் பாலம் அருகில் சென்று வாகணத்தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த TN–45–C–0701 என்ற பதிவெண்கொண்ட TVS 50 இருசக்கர வாகனத்தில் எதிரி அரசுக்கு சொந்தமான கனிம வளத்தை எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் அரசுக்கு இழப்பை ஏற்படுத்தவும் மற்றும் வியாபாரம் செய்யும் ஆதாய நோக்கத்துடன் தனது சுயலாபம் கருதி திருட்டு தனமாக புகளூர் காவிரி ஆற்றிலிருந்து மணலை திருடி மணல் மூட்டையுடன் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் வந்துள்ளதாகவும், எனவே

எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு.379 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக, அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் அ.சா.1 திரு. பிரகாஷ், கைப்பற்றுதல் மகசர் சாட்சி ஆவார். அ.சா.**2** திரு.கருணாநிதி, இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி திரு.சண்முகானந்தவடிவேல், திரு.ஜெயராமன் சார்பாக சாட்சியமளித்த நபர் ஆவார்.

11) இவ்வழக்கில் சம்பவ நாளான 17.10.2019 அன்று முதல் நிலைக் காவலராக பணியிலிருந்த போது அ.சா.1, காவலர் மாரிமுத்து மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்தவடிவேல் ஆகியோர் புகளூர் வாய்கால் பாலம் அருகே வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது காவேரி ஆற்றுப்படுகையில் அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது சிமெண்ட சாக்கு பைகளில் ஆற்று மணல் எவ்வித அரசு அனுமதியும் ரசீதும் இல்லாமல் திருட்டுத்தனமாக ஏற்றிவரப்பட்டது எனவும், மேற்படி மணல் திருட்டுத்தனமாக கடத்தி வந்ததாக அரசுத் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

12) இவ்வழக்கின் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரையும் பரிசீலனை செய்யும் போது, மணல் கைப்பற்றப்பட்டுள்ளது என்பது தெரிய வருகின்றது.

13) மணலுடன் கூடிய இருசக்கர வாகனம் மற்றும் எதிரி உள்பட யாதொருவரும் பெற்றுச் செல்ல எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததில் இருந்து, மணல் மேற்படி TN–45–C–0701 என்ற TVS 50 இருசக்கர வாகனத்தில் திருடப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

14) வழக்கு கோப்பு ஆவணங்களை ஆராயும் போது, மேற்படி சம்பவத்தை தொடர்ந்து, எதிரி கைது செய்யப்பட்டு, நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார் என்பது தெரிய வருகின்றது.

15) பொதுவாக காவலர்கள் மட்டுமே சாட்சியாக உள்ள வழக்குகளில், எதிரியின் மீதான குற்றச்சாட்டை உறுதி செய்து தண்டிப்பதில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். இவ்வழக்கில் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்த காவலர்களே கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக இருந்துள்ளனர். மேலும், அரசு தரப்பில் தனி நபர் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

16) மேற்கண்ட சங்கதியை பொறுத்து மாண்பமை உச்சநீதிமன்றத்தால், Sathyan Vs. State of Kerala [2023 INSC 703] என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"22. Conviction being based solely on the evidence of the police officials is no longer an issue on which the jury is out. In other words, the law is well settled that if the evidence of such a police officer is found to be reliable, trustworthy then basing the conviction thereupon, cannot be questioned, and the same shall stand on firm ground."

17) மேற்கண்ட வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வழக்கின் பொருண்மையை பரிசீலனை செய்யும் போது, அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கிணங்க கோர்வையாகவும், தெளிவாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் அமைந்துள்ளதால், அரசு தரப்பில் தனி நபர் சாட்சியங்கள் இவ்வழக்கில் விசாரிக்கப்படாததை மட்டும் வைத்து எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18) எனவே, தனி நபர் சாட்சிகள் விசாரிக்காததால் இவ்வழக்கு பாதிக்கப்படவில்லை எனவும், அதனால் இவ்வழக்கினை நிராகரித்து எதிரியை விடுதலை செய்யும் அளவிற்கு முக்கிய காரணியாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

19) எதிரி தரப்பில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்துடன் எதிரிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்ற வாதத்தை முன் வைக்கவில்லை. மேலும், மேற்படி TN–45–C–0701 என்ற பதிவெண் கொண்ட TVS 50 என்ற இரு சக்கர வாகனத்தில் இருந்த மேற்படி மணல் தனிநபர்களுக்கு சொந்தமானது என்றோ, திருட்டு மணல் இல்லை என்றோ எவ்வித வாதத்தையும் முன்வைக்கவில்லை. ஆனால், அரசு தரப்பில் எதிரி பயன்படுத்திய TN–45–C–0701 என்ற பதிவெண் கொண்ட TVS 50 என்ற இரு சக்கர வாகனத்தில் மணல் திருடப்பட்டது என வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

20) எனவே, எதிரி ஆற்று மணலை சட்ட விரோதமாக கொண்டு சென்றுள்ளார் என்று எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமானது என்று முடிவு செய்து அரசுத் தரப்பு வழக்கினை புறம்

தள்ளுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரியின் மீதான குற்றச்சாட்டினை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

21) எதிரிக்கு எதிரான மேற்கண்ட குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கு சம்பவம் நடந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரி நன்னடத்தை சட்டத்தின் பலனையும், பா.நா.சு.ச பிரிவு 401–ன் கீழான பலனையும் பெறத்தக்கவர் அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

22) எதிரிக்கு அளிக்கவிருக்கும் தண்டனை குறித்து 271(2) ன் படி எதிரியிடம் வினவியபோது எதிரி பின்வருமாறு பதிலளித்தார்கள். சம்பாதிக்கவோ, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்றோ நினைக்கவில்லை என்றும், அவர்களது குடும்பம் அவர்களது வருமானத்தை நம்பியே உள்ளது என்றும், போதிய வருமானம் இல்லை என்றும் அதனால் குறைந்தபட்ச தண்டனை மட்டும் வழங்குங்கள் என்றும் கூறினார்கள்.

23) முடிவில் எதிரியின் வேண்டுகோள், ஏழ்மைத்தன்மை, வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலன் இவைகளை கருத்தில் கொண்டு, எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டின் கீழ் எதிரி குற்றவாளி என தீர்மானித்து, எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த காலங்களை கருத்தில் கொண்டு, கு.வி.மு.ச பிரிவு 248(2)–ன் படி எதிரிக்கு, ரூ.2,000/–ஐ (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அபராதமாக எதிரி செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகின்றது. மேற்படி அபராத தொகையை எதிரி செலுத்த தவறும்பட்சத்தில் ஒரு வார காலம் மெய்க்காவல் சிறை தண்டனையை எதிரி அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகின்றது.

24) எதிரியின் மீது இக்குற்ற சம்பவத்தை தவிர வேறு எவ்வித முன் வழக்குகள் இல்லை என்பதை கருத்தில் கொண்டு, இவ்வழக்கில் R.P.No. 21/20 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குச் சொத்தான TN–45–C–0701 என்ற பதிவெண் கொண்ட TVS 50 என்ற இரு சக்கர வாகனம் அதன் உரிமையாளரிடம் உரிய ஆதரவை பெற்று கொண்டு, மேல்முறையீட்டு காலத்திற்கு பின் நிரந்தரமாக ஒப்படைக்க உத்தரவிடப்படுகின்றது. மேலும், மேற்படி வாகனத்தை இனிமேல் மணல் திருட்டு போன்ற குற்ற செயல்களுக்கு பயன்படுத்த கூடாது என உத்தரவிடப்படுகின்றது.

25) மேலும், இவ்வழக்கின் வழக்கு சொத்தான TN-45-C-0701 என்ற பதிவெண் கொண்ட TVS 50 என்ற இரு சக்கர வாகனத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஆர்.பி.எண் 21/20 ல் கண்டுள்ள மூன்று முட்டை மணலை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் கனிமம் & கண்காணிப்பு பிரிவு உதவி பொறியாளரிடம் ஒப்படைக்கும்படி இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் வருடம், ஜூன் மாதம் 29-ம் நாள் இன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M CHARLES ALBERT
Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.06.29 18:25:02 +0530

நீதித்துறை நடுவர் எண். 2,
கரூர்.

<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-</u>

அரசு தரப்பு சாட்சிகளின் வ.எண்.	**சாட்சிகளின் பெயர்**	**விவரம்**
1	திரு. பிரகாஷ்	கைப்பற்றுதல் மகசர் சாட்சி
2	திரு. கருணாநிதி	புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்த நபர்

<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :-</u>

அ.சா.ஆ. வ.எண்.	**ஆவணங்களின் விவரம்**	**குறியீடு செய்யப்பட்டது**
1.	கைப்பற்றுதல் மகசர்	அ.சா.1
2.	புகைப்படம்	அ.சா.1
3.	முதல் தகவல் அறிக்கை	அ.சா.2
4.	படிவம் 91	அ.சா.2

5.	சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை	அ.சா.2

<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுபொருட்கள்:–</u>

இல்லை

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:–</u>

இல்லை

<u>எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :–</u>

இல்லை

<u>எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுபொருட்கள்:–</u>

இல்லை

M CHARLES ALBERT

Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.06.29 18:25:46 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
கரூர்.

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2) எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப் படவில்லை.
3) வழக்கின் முடிவு slip proceeding காவல் துறையினருக்கு கொடுக்க உத்தரவிடப்பட்டது.